**நீர்ப்பாசன அமைச்சு**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியை நீடித்தல்

2020.09.25 ஆந் திகதிக்குரிய 2195 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்த நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியை 2021.01.20 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதி தவிர்ந்த விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே செயற்படும் என்பதை தயவுடன் கவனத்திற்கொள்க.

எந்திரி கே. டி. நிஹால் சிறிவர்தன,
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2021, சனவரி 07.

01-487

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கில மொழித்தேர்ச்சிப் பரீட்சை – 2020

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை 2021, ஏப்பிறல் மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

2. அதிபர் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி தொடக்கம் மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உத்தியோகத்தர் ஒருவர் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்காக குறைந்தபட்சம் திறமைச்சித்தி அல்லது அதனை விட உயரிய சித்தியைப் பெற்றிருப்பின் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் அப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1885/ 31 ஆம் இலக்க 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சையானது ஓர் வினாத்தாளினை மட்டும் கொண்டுள்ளதோடு, விண்ணப்பதாரர்களின் வசதிக்காக அதன் பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை நடைமுறை, பாடவிதானம் வருமாறு
(I) பொது ஆங்கிலம் (General English)
100 புள்ளிகள் - காலம் 03 மணித்தியாலங்கள்

**பாடவிதானம்**

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate.

- Tenses and Numbers
- Sentences (Simple / Compound /Complex / Compound Complex)

